மொழி தந்தார்கள். அதற்கு நன்றி. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இனியும் காலதாமதம் ஏற்படாமல், ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயம் செய்து, அந்தக் காலத்திற்குள் இதைக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச்செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்ய ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.